**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 02 April-June 2024**

# *பாரதியார் பாடல்களில் விடுதலை உணர்வும், மொழி உணர்வும்*

[1]**ப. விக்னேஸ்வரி**
*முனைவர்.*
*இணைப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை* 641105
[2]**அ.பிரபாகரன்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர்* 641105

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்களுள் நிகரற்ற கவிஞராக திகழ்ந்தவர் மகாகவி சுப்ரமணிய பாரதியார். புதுமையை வரவேற்கும் சிந்தனையாளராக விளங்கியவர் .இவர் தன்னுடைய பப்பு முழுவதிலும் வெளிப்படுத்தியுள்ளார் தன்னுடைய சிந்தனையை புதிய சொற்களால் வெளிப்படுத்தினார். விடுதலை உணர்வும், மொழி உணர்வும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவின் விடிவெள்ளியாகத் தோன்றியவர். விடுதலை உணர்வும், மொழி உணர்வும் மக்களிடையே பரவச் செய்த மகான். பாரதி ஒரு பன்மொழிப் புலவர். தாய்மொழியாகிய தமிழைத் தவிர, ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி முதலிய மொழிகளை நன்கு கற்றிருந்தார். எனவே, தமக்குத் தெரிந்த பிற மொழிகளுடன் தமிழ் மொழியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். தமிழ் மொழிக்கு நல்ல உரமான வளமான கவிதைகளை தந்து நம்மிடையே விழிப்புணர்வை உண்டாக்கிய மாபெரும் கவிஞன் தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இந்திய விடுதலையின் போது நாட்டு மக்களுக்கு போராட்ட உணர்வினை ஊட்டியவர்,

“வந்தே மாதரம் என்போம்- எங்கள்

மாநிலத் தாயை வணங்குவோம் என்போம்”

என்ற பாடல் வரி மூலம் படிக்காத பாமர மனிதனுக்கும் நம் நாட்டின் மீது பக்தியை உண்டாக்கியவர். பாரதியார் நம்மிடையே வாழ்ந்த காலங்கள் குறைவாக இருந்த போதிலும் அவர் படைத்த கவிதைகள் சாக வரம் பெற்றவையாகத் திகழ்கின்றது.விடுதலை வேட்கைக்கு தமிழை ஒரு கருவியாகப் பயன்படுத்திய பாரதி , சமூக அவலங்களை அதன் வழியாக எதிர்க்கவும் அஞ்சவில்லை. பாரதி தனது கவிதை மூலமாக அடைந்த மகிழ்ச்சியையும், மொழிப்பற்றினையும் இந்த கட்டுரை எடுத்தியம்புகிறது.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

## பற்று

பற்று என்பதற்கு ஆசை விருப்பம் என்று பல பொருள்கள் கூறலாம். பொருள் மனைவி மக்கள் மீது கொள்வது பற்று தான். ஆனால் அந்த பற்று அழியக்கூடியது. தன்னடக்கத்துடன் மக்களிடையே கூடிய மொழிப்பற்று காலத்தால் அழியாதது . அது தன்னை உடையவரை இறந்தும் இறவாப் புகழ் பெறத் துணை செய்யும்.

மனிதன் எண்ணத்தை வெளிப்படுத்த உறுதுணையாக திகழ்வது மொழி உணர்வு. மனிதனாய் பிறந்த அனைவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்று. உணர்வு இல்லாதவன் பகுத்தறிவற்ற விலங்குகளுக்கு ஒப்பாவான். இந்த கருத்தை பாரதியின் பாடல்கள் உறுதிப்படுத்தும். இரு கண்கள் ஒன்றாக கூறியதுடன் மற்றவர்களையும் அவ்வாறே செய்ய வைத்த உலக மகாகவிஞர் பாரதியார்.

## தொன்மையும் சிறப்பும்

‘கல் தோன்றி மண் தோன்றா காலத்தை வாளோடு முன் தோன்றிய மூத்த குடி’ என்ற தொடர் நமது தமிழின் தொன்மைக்கு சான்றாகும். கல், மண் முதலியன தோன்றாத முன்னமே தோன்றியது நம் தமிழினம் என்பது பாரதியின் முடிவு.

## பாரதியின் மொழி ஆளுமை

படைப்பாளனின் மொழி ஆளுமை என்பது பாடுபொருள். அதன் தன்மை அப்பொருள் படைப்பாளியால் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாங்கு நடை, உத்திகள், அலங்கார பண்புகளைப் பொறுத்து அமைகின்றது. படைப்பாளனின் உள்ளத்து, உணர்வும் படைப்பில் உரியவாறு வெளிப்படுமாயின் அப்படைப்பு ஆளுமை பண்போடு வெளிப்படுகின்றது. அவ்வகையில் மொழி ஆளுமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்றவர்களுள் வள்ளுவரும், கம்பரும், பாரதியும் ஆவார் என்கிறார் ஈ சுந்தரமூர்த்தி.

“பா ரதம் கொண்டு பாரதம்
வலம் வந்தவன் பாரதி”

என்கிறார் . ஒரு படைப்பின் வெற்றிக்கு மொழி ஆளுமைத் திறன் இன்றியமையாத ஆகின்றது என்கிறார்.

பாரதி குழந்தைகளுக்காகப் பாடிய பாப்பா பாடல் குழந்தைகளுக்கு பல்வேறு அறிவுரைகளை கூறுகிறது.

“ஓடி விளையாடு பாப்பா பாட்டில்”

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

இளம் உள்ளத்தில் எளிய இனிய தமிழ் சொற்களால் தமிழ் உணர்வினை எடுத்துரைக்கிறார்.

“சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே
அதை தொழுது படித்ததடி பாப்பா”

என்று தமிழ் மொழியை வணங்கிப் படித்திட கூறுகின்றார். பொதுவுடமைச் சிந்தனையை தம் பாட்டின் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தியவர்.

பாரதி சமுதாயத்தை மாற்றக்கூடிய விழிப்புணர்வு ஊட்டக்கூடிய வரிகளை தம் படைப்புகளில் வெளிப்படுத்தியவர், பொது என்று சொல்லுக்கு ‘உடமை’ என்ற சொல்லும் தமிழில் உள்ள சொற்களை எனினும் பொதுவுடமை என்ற புதியதோர் சொல்லாட்சி ஏற்படுத்தியவர். பழைய சொற்களுக்கு, புதிய பொருட்சுவையை ஏற்படுத்தும் மொழி ஆளுமை பாரதிக்கு உண்டு.

“முப்பது கோடி ஜனங்களின் சங்கமம்
முழுமைக்கும் பொது உடைமை”

என்று ஒப்பில்லாத சமுதாயமாக உலகத்திற்கு ஒரு புதிய சமுதாயமாக நம் நாடு விளங்க வேண்டியவர் பாரதியார்.

“எங்கும் எதிலும் தமிழ் இருக்க வேண்டும்
எல்லா துறைகளிலும் தமிழை பகுத்தவேண்டும்”
அப்போதுதான் தமிழ் செழிக்கும் என்கிறார்.
“வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம்”
என்றும்,

“வானம் வளர்ந்த அனைத்தும் அளந்திடும்
வான் மொழி வாழியவே”

என்று தமிழின் சிறப்பினை பாரதி என்று யாரால் வாழ்த்த முடியும். சிறப்பு நெல்லியில் தமிழ் பெற்று இருக்க வேண்டுமானால் ஆக்கபூர்வமான பணிகள் சிலவற்றை தமிழுக்குச் செய்ய வேண்டும் என்கிறார் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் தமிழ்

## தமிழின் பெருமை

பாரதி ஒரு பன்மொழிப் புலவர். தாய்மொழியாகிய தமிழைத் தவிர, ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், தெலுங்கு,இந்தி முதலிய மொழிகளை

நன்கு கற்றிருந்தார். எனவே, தமக்குத் தெரிந்த பிற மொழிகளுடன் தமிழ் மொழியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். தம் தாய் மொழியாகிய தமிழ் மொழி இனிய மொழியாகவும் சிறந்த மொழியாகவும் இருப்பதை எண்ணி மகிழ்கிறார் .அடுத்த நிலையில், தாம் அறிந்த புலவர்களிலே தமிழ்ப் புலவர்களாகிய கம்பனையும், வள்ளுவரையும், இளங்கோவையும் போலச் சிறந்த புலவர்களை வேறு எங்கும் பார்க்கவில்லை என்கிறார் பாரதியார்.

## தமிழ்ச் சொல்லின் பெருமை

பாரதியார் குழந்தைகளுக்காகப் பாடிய 'பாப்பா பாட்டில்' குழந்தைகளுக்குப் பலவிதமான அறிவுரைகளைக் கூறுகிறார். தாய்நாட்டின் பெருமை, தாய்மொழியின் பெருமை ஆகியவற்றையும் குழந்தைகளுக்கு உரைக்கிறார். அவ்வாறு கூறும்பொழுது தமிழ்ச் சொற்களின் பெருமையினை எடுத்துரைக்கிறார்.

## உலகெலாம் தமிழோசை ஒலிக்கட்டும்

தமிழைத் தமிழ் நாட்டிலுள்ள தெருக்களில் எல்லாம் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்று கூறிய பாரதியார், அதை உலகம் எல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். எனவே,

எல்லாக் காலத்திலும் எல்லோருக்கும் பொருந்துகின்ற, எல்லோரும் ஒத்துக் கொள்கின்ற உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் புகழுடைய இலக்கியங்களாகத் திகழும். அத்தகைய புகழுடைய இலக்கியங்களைப் படைத்துத் தமிழை வளப்படுத்துங்கள் என்கிறார் பாரதியார்.

அதோடு மட்டும் அல்லாமல், உலகிலுள்ள சிறந்த பல்துறை அறிஞர்களின் உயர்ந்த சிந்தனைகளும் தமிழ் மொழியில் இடம்பெறும் வகையில் அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதவேண்டும் என்கிறார் பாரதியார்.

எல்லாக் காலத்திலும் எல்லோருக்கும் பொருந்துகின்ற, எல்லோரும் ஒத்துக் கொள்கின்ற உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் புகழுடைய இலக்கியங்களாகத் திகழும். அத்தகைய புகழுடைய இலக்கியங்களைப் படைத்துத் தமிழை வளப்படுத்துங்கள் என்கிறார் பாரதியார்.

அதோடு மட்டும் அல்லாமல், உலகிலுள்ள சிறந்த பல்துறை அறிஞர்களின் உயர்ந்த சிந்தனைகளும் தமிழ் மொழியில் இடம்பெறும்

வகையில் அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதவேண்டும் என்கிறார் பாரதியார்.

## தமிழுணர்வு

பயிர், செடி, கொடி, மரம், மனித உயிர்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிற்கு அடிப்படை ஆதாரமாக எப்படி நீர் இருக்கின்றதோ, அதுபோல உயிரை இயக்க மொழி அவசியமாகின்றது. அந்தச் சக்தியைத் தருவது தாய்மொழி. தாய்மொழியாம் தமிழ்மொழியை அமிழ்தம் என்று பாவேந்தர் பாடியதைப்போல (தமிழுக்கும் அமுதென்று பேர்) நாமக்கல் கவிஞரும்,

*"தமிழென்று தருகின்ற தனியந்தப் பெயரில்*
*அமிழ்தென்றுவருகின்ற அதுவந்து சேரும்"*
**(நாமக்கல் கவிஞர் பாடல், பக்கம் - 19)**

என்று தமிழ்மொழியின் பெருமையை உணர்ந்து பாடுகின்றார்.

## தமிழ்மொழியின் பெருமை

நமது தமிழ்மொழியைத் தமது உயிராக எண்ணுகின்றவர்களுக்குப் புகழ் மிகுதியாக வந்து சேரும் என்ற நம்பிக்கையோடு தமிழுணர்வைப் பாடியவர் நாமக்கல் கவிஞர் என்று சொல்லலாம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று பாரதி கூறியதைப்போல,

*எந்தெந்த நாட்டின்கண் எது நல்லதென்றே*
*அந்தந்த மொழிதந்த அறிவின்கண் நின்று*
*முந்துள்ள இவையென்ற முறையுள்ள எல்லாம்*
*தந்துள்ள தொகைபோலும் தமிழென்ற சொல்லாம்*
**(நாமக்கல் கவிஞர் பாடல், பக்கம் - 21)**

என்று தமிழ் என்ற சொல்லின் பெருமையைப் பாடுகின்றார்.

## தமிழனின் பெருமை

நாமக்கல் கவிஞரின் பாடல்களில் தமிழுணர்வு எவ்வளவு அதிகம் இருந்ததோ அதே அளவு தமிழன் பற்றிய உணர்வு இருந்தது என்பதை இனிக் காணலாமா?

பக்தியும் அன்பும் அறமும் தமிழனின் பண்புகளில் குறிப்பிடத்தக்கவை என்று நாமக்கல் கவிஞர் குறிப்பிடுகின்றார். அதற்கு ஒரு பாடலைச் சான்றாகப் பார்க்கலாம்.

*தமிழன் என்றோர் இனமுண்டு;*
*தனியே அவற்கோர் குணமுண்டு*

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

*அமிழ்தம் அவனுடைய மொழியாகும்*
*அன்பே அவனுடைய வழியாகும்*

காப்பிய நூல்களை எழுதிய பெருமையும், திருக்குறள் யாத்த சிறப்பும், பக்திப்பாடல்களின் புகழும், புதுமையாய்க் கவிதை யாத்த பாரதியின் பாக்களும் தமிழ்மொழிக்கு மணிமகுடம் சூட்டக் கூடியவை எனத் தமிழனின் சிறப்புகளில் சிறந்தனவற்றைப் பட்டியலிடுகிறார்.

**அறிவியல் பார்வை**

இன்று உலகம் தகவல் தொழில் நுட்பத்தினால் உள்ளங்கையில் அடக்கப்படுகிறது. ஓர் இடத்து செய்தி மற்றோர் இடத்திற்கு அல்லது உலகத்தில் எம்முனைக்கும் பாவ விண்ணில் காடத்து வெப்படுகின்றன. நம் பாரத நாடு உலகின் தலைசிறந்த நாடாக வளர வேண்டும் தமிழன் தலை திமிர்ந்து நிற்க வேண்டும் என்று எண்ணிய பாரதி,

"காசி நகர் புலவர் பேசும் உரைதாள்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்." (116)

என்று பாடினார். பாரதியின் கனவால் வானொலி உருவாயிற்று பின்பு அது தொடர்ந்து தொலைக்காட்சி மின் கணினி என பல சாதனங்கள் தோன்றி விட்டன.

மொழிப்பற்று

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனச் சான்றோர் கூறியது போல தாம் பெற்றுள்ள தமிழ் உணர்வைத் தமிழின் தீஞ்சுவையைக் குழந்தைகளுக்கும் ஊட்ட ஆவல் கொண்டார் பாரதி, '

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-
அதைச் தொழுது படித்திடடி பாப்பா" (225)

எனக் குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறார்.

தமிழ் நாட்டினைப் பற்றியும் தமிழ் மொழிப் பற்றியும் பாரதி போற்றிப் பாடியுள்ளார். இச்செயலே அவருடைய மொழிப்பற்றை

விளக்குகிறது. புதிய கலைகள் தமிழ் மொழியில் வளர வேண்டும் என்பதை,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்." (141)

என்கிறார். தமிழ் மொழியின் வளர்ச்சி பரந்த எல்லையை நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் ஆர்வத்தில் அவர்,

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" என்கிறார். (141)

## முடிவுரை

காலம் தந்த கவிஞன் அவரது உரிமை குரல் இல்லையெனில் விடுதலை வேட்கை இல்லை. தமிழ் மொழிக்கு மகுடமாய் அவரது மொழி ஆளுமைத் திறன் மேலோங்கி நிற்கிறது, அவரது மொழி ஆளுமை பாக்களில் மட்டுமின்றி வசன கவிதைகளிலும், உரைநடைகளிலும், கட்டுரைகளிலும் மேலோங்கி நிற்கிறது. அதோடு தாய் மொழியின் பெருமையைக் குறிப்பிடுகின்றார்.

1. 112
2.

1. பாரதியார், (1992) பாரதியார் கவிதைகள், குமரன் குமரன் பதிப்பகம், சென்னை,

2. பாரதியார், (2019) பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், சென்னை,